பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 12 2025** **7 15**

ஞாயிற்றுக்கிழமை இரவு

*தலைப்புச் செய்திகள்*

1. எரிசக்தி பாதுகாப்பு காலத்தின் கட்டாயம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. ஆஸ்திரேலியாவில் யூத மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

3. லட்சத்தீவில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில், 519 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

4. கோவிட்-19 தடுப்பு மருந்து பாதுகாப்பானது மற்றும் வலிமையானது என்று தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை நடத்திய ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

5. உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எரிசக்தி பாதுகாப்பு காலத்தின் கட்டாயம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளை வழங்கிப் பேசிய அவர், சேமிக்கப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரமும் வருங்கால சந்ததியினரின் நலனுக்காக இயற்கையைப் பாதுகாப்பதற்கான பொறுப்புணர்வை பிரதிபலிப்பதாக கூறினார்.

தூய்மையான எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட அவர், கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே இலக்கை எட்டி இந்தியா சாதனை படைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் அதேவேளையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் யூத பண்டிகையான **Hanukkah**-வை கொண்டாடிய மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட கொடூரத்

தாக்குதலுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த தாக்குதலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இந்திய மக்கள் சார்பில் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

இந்த துயரமான காலகட்டத்தில் ஆஸ்திரேலிய மக்களுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்தை இந்தியா ஒருபோதும் சகித்துக்கொள்ளாது என்றும், தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் Bondi கடற்கரைப் பகுதியில் இன்று காலை நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். காவல்துறையினர் உட்பட 29 பேர் காயமடைந்துள்ளனர்.

<<<<>>>>

நாட்டின் நீடித்த வளர்ச்சிக்கு மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியம் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்திதுறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் மின்சார சேமிப்பு, வருங்காலத்தில் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட பசுமை எரிசக்தி பயன்பாடு முக்கியம் என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

யூனியன்பிரதேசமான லட்சத்தீவில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில், மீன்வளம் மற்றும் கடல் வளம் சார்ந்த தொழில்களில் **519** கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய மீன்வளம் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

**Bangaram** தீவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய சிறப்பு பொருளாதார மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பிடிக்கப்படும் மீன் வகைகள் இனி இந்திய மீன் வகையாக கருதப்படும் என்றார்.

இந்த மீன்கள் இறக்குமதி ரகங்களாக கருதப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாற்றியமைக்கப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டல விதிமுறைகளின்படி, மீன் ஏற்றுமதி நடைமுறைகளை சீரமைத்து

தேவையற்ற சுங்கவரி நடைமுறைகளை அகற்ற வகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கை மீனவர்களுக்கு மட்டுமின்றி மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கும் உதவிகரமாக அமைவதோடு இந்திய கடல்சார் பொருட்கள் உலக அளவில் போட்டியிடுவதை மேம்படுத்தும் என்றும் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த **11** ஆண்டுகளில் **42** ஆயிரத்துக்கும் அதிகமான **LHB** ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த **2004** முதல் **2014** வரையிலான **10** ஆண்டு காலத்தில் **2** ஆயிரத்து **300 LHB** பெட்டிகள் மட்டுமே தயாரிக்கப்பட்ட நிலையில், தற்போதைய ஆட்சியில் இந்த உற்பத்தி **18** மடங்கு அதிகரித்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் கடந்த நவம்பர் மாதம் வரை **4** ஆயிரத்து **200**க்கும் அதிகமான பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பயணியருக்குத் தேவையான வசதிகளுடன் இந்தப் பெட்டிகள் வடிவமைக்கப்படுவதாகவும் ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநில சட்டப்பேரவையின் குளிர்கால கூட்டத்தொடர் நவ ராய்ப்பூரில் இன்று தொடங்கியது.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தொடரில் முதல் நாளான இன்று, சத்தீஸ்கட் தொலைநோக்குத் திட்டம்-2047 குறித்த சிறப்பு விவாதம் நடைபெற்றது.

பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் இன்றைய கூட்டத்தொடரைப் புறக்கணித்தபோதிலும் அவையின் வழக்கமான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டத்தொடர் முதல் முறையாக காகிதப் பயன்பாடு இல்லாத அமர்வாக நடைபெறுகிறது.

<<<<>>>>

நாகாலாந்தில் நடைபெற்ற **Hornbill** திருவிழா மனித உணர்வுகள் மற்றும் பண்டைக்கால - தற்கால கலைகளின் சங்கமமாக திகழ்ந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக வடகிழக்கு விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சியடையும்போதுதான் நாடு முழுமையான வளர்ச்சியை அடையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

கோவிட்-19 தடுப்பு மருந்து பாதுகாப்பானது மற்றும் வலிமையானது என்று தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை நடத்திய ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில், தடுப்பு மருந்து செலுத்திக்கொண்ட சிலரின் உயிரிழப்புக்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் ஏதுமில்லை என்று தெரியவந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

18 முதல் 45 வயதிற்குட்பட்டோரின் உயிழப்புகள் குறித்து ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதாகவும் அந்தக் கவுன்சில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, உத்தரப்பிரதேச பிஜேபி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை அக்கட்சியின் தேர்தல் பொறுப்பாளரான மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் லக்னோவில் இன்று வெளியிட்டார்.

திரு. பங்கஜ் சௌத்ரி கட்சியின் மாநிலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மஹராஜ் கஞ்ச் தொகுதியில் இருந்து 7 முறை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பங்கஜ் சௌத்ரி அர்ப்பணிப்பு மற்றும் கட்டுப்பாடுடன் கட்சிப் பணியாற்றியவர் என்றும் திரு. ராஜ்நாத் சிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<>>>>

சென்னையில் இருந்து செம்மரக்கட்டைகளை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியை மத்திய வருவாய்ப் புலனாய்வுத்துறை முறியடித்துள்ளது.

இது தொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில்

மேற்கொள்ளப்பட்ட சோதனையில் **15** மெட்ரிக் டன் எடையுள்ள செம்மரக் கட்டைகள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு சுமார் **6** கோடி ரூபாய் என்றும், கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட **4** பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் நிதியமைச்சகம் கூறியுள்ளது,

<<<<>>>>

இணைய மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டைச் சேர்ந்த **4** பேர் உட்பட **17** பேர் மீது மத்திய புலனாய்வுத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக சி.பி.ஐ. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் போலியான முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் கடன் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டதையடுத்து **58** நிறுவனங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பன்னாட்டு இணைய மோசடி கட்டமைப்பு தகர்க்கப்பட்டிருப்பதாகவும் சிபிஐ கூறியுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா, 3-0 என்ற ஆட்டக் கணக்கில் ஹாங்காங்கை வென்றது.

-----------------

19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 90 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

மழை காரணமாக போட்டி 49 ஓவர்களாக குறைக்கப்பட்ட நிலையில் 46 புள்ளி ஒரு ஓவரில் 240 ரன்னுக்கு இந்திய அணி ஆட்டமிழந்தது.

இதையடுத்து 241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்த பாகிஸ்தான் அணி 41 புள்ளி 2 ஓவரில் 150 ரனுக்கு ஆட்டமிழந்தது.

-------------

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** பட்டம் வென்றார்.

கட்டாக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-10 என்ற செட் கணக்கில் Isharani Baruah-ஐ வென்றார்.

ஆடவர் பிரிவில் கிரண் ஜார்ஜ் பட்டம் வென்றார்.

ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 13-21, 21-16 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் முகமது யூசுஃபை வென்றார்.

--------------

லெபனானில் நடைபெற்ற ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--------------

துபாயில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 19 தங்கம், 15 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<The End>>>>